1981 பிப்ரவரி 5]

[முற்பகல் 10-20].

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, 36 ரூபாய் மாதத்திற்கு கொடுத்தால் அவர்களை எப்படி நன்றாக படிக்க வைக்க முடியும் அவர்களுடைய சாப்பாட்டுக்கே, இன்றைய விலைவாசியில், அது போதுமா? ஆகையால் தான் தனியார் ஏதாவது ஒரு பகுதி அதோடு போடுகிறார்களா என்று கேட்டேன். அமைச்சரவர்கள் அதற்கு விளக்கக் குறிப்பைப் பார்க்கச் சொன்னார்கள். அதில் இது பற்றி ஒன்றும் இல்லை. ஆகவே அதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜே. எஸ். இராசு : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவான ஒரு குற்றச் சாட்டாக இருப்பதால் அனுமதிப்பதற்கில்லை ; அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

வாக்காளர் பட்டியல்.

*குறுகிய கால வினா எண். 4—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18 வயதானவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி முடிந்து விட்டதா?

(ஆ) எவ்வளவு வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்?

(இ) நகரப் பகுதிகளில் உள்ள 18 வயது அடைந்தவர்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 36,17,036.

(இ) இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1981 பிப்ரவரி 5

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, 21 வயதடைந்த வாக்காளர்கள் எவ்வளவு பேர்? இப்போது எவ்வளவு உயர்ந்திருக்கிறது? நகரப் பகுதிகளில் உள்ள 18 வயது அடைந்த வாக்காளர்களைச் சேர்க்கும் பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே 1978ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாளில் வாக்காளர்களைச் சேர்க்கும் பணி தொடங்கி, கணக்கிடப்பட்டபடி 21 வயது வந்தவர்களும் அதற்கு மேற்பட்டவர்களுமான வாக்காளர் எண்ணிக்கை 2,07,84,260. இப்போது 18 வயது வந்தவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும் சேர்க்கப்பட்ட பிறகு 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் வாக்காளர் பட்டியல்படி 36,17,036 புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, தேர்தல் முறை சீர்திருத்தம் குறித்து மத்திய சட்டம், நீதி, கம்பெனி விவகாரங்கள் அமைச்சர் மாண்புமிகு சிவசங்கர் அவர்கள் நேற்றைய தினம் பனாஜீயில் நடைபெற்ற அமைச்சகத்தின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் வயதை 21-லிருந்து 18 ஆக குறைக்க மாநில அரசுகளுடன் கலந்து முடிவெடுக்க இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார். ஆகையால் உள்ளாட்சித் தேர்தலுக்கு 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதைப் போல பொதுத் தேர்தலிலும் வாக்குரிமை அளிக்க மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 18 வயது வந்தவர்களுக்கும் பொதுத் தேர்தலில் வாக்கு அளிக்கின்ற உரிமையை கொடுக்கின்ற அதிகாரம் நம்மிடம் இல்லை. ஆனால் மத்திய அரசு அதுபற்றிய குறிப்பை இதுவரை அனுப்பவில்லை; அனுப்பினால் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, 18 வயது வந்தவர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி நடைபெறும்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்தவர்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. அப்படி விடுபட்டவர்களுடைய பெயர்களை மீண்டும் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, 18 வயது வந்தவர்களைச் சேர்க்கும் பணி பற்றியது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த பட்டியல் ஏற்கெனவே ஊராட்சிகளுடைய மக்கள் குழுவினாலும் கோட்ட அளவில் அரசு அமைத்த சட்டமன்ற உறுப்பி

198 ப்ரவரி 5]

னர்கள் அடங்கிய குழுவினாலும் பரிசீலித்து, 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் நாள் அன்று அரசு வெளியிட்டிருக்கிறது. திருத்தம் செய்வதற்கான காலக்கெடு குறிப்பிட்டு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலத்திற்குள் வந்தால் நிச்சயமாக சேர்க்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மாம்பலம் காவல் நிலையத்தில் போலீஸ் லாக் கப்பில் ஒருவர் கொல்லப் பட்டிருக்கிறார். அதுகுறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மட்டும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை. பலர் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை அவையில் எழுப்பக் கூடாது.

திரு. ஏ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு வார காலத்திற்கு முன்னாலே வகுப்பிலேயே ஒரு மாணவன் பரிதாபமான முறையில் சாகடிக்கப்பட்டிருக்கிறான். அது குறித்து.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப் பல பிரச்சினைகள்பற்றி பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்றார்கள். சபையினுடைய நேரத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்குத் தகுந்த மாதிரிதான் பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தினசரி இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எல்லோரும் கேட்டுக்